


**27. 10. 2025**

## தலைப்பு செய்திகள்

1. மத்திய அரசு உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு வழங்கும் ஆதரவால் விவசாயிகள் ஆளுமை பெற்றுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அனைவரும் விரைந்து சரணடையுமாறு உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

3. மோன்தா புயல் சென்னைக்கு கிழக்கே, தென்கிழக்கே 520 கிலோமீட்டர் தொலைவில் தற்போது மையம் கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

4. தமிழகம் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தயாராக உள்ளது என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் உட்பட முருகப்பெருமான் ஆலயங்களில் சூரசம்ஹாரம் இன்றுமாலை நடைபெறுகிறது.

## இனி விரிவான செய்திகள்

## பிரதமர்

மத்திய அரசு உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு வழங்கும் ஆதரவால் விவசாயிகள் ஆளுமை பெற்றுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நாடுமுழுவதும் ஒரே மாவட்டம் ! ஒரே உற்பத்தி பொருள்! என்ற மத்திய அரசின் தொலைநோக்குத் திட்ட நடவடிக்கைகள் தொடர்பான மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனின் கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கு மத்திய அரசு வழங்கிய உத்வேகத்தால் வேலை வாய்ப்புகள் அதிகரித்ததோடு, ஊரக பகுதிகளில் தற்சார்பு நிலை முன்னெடுத்துச் செல்லப்படுவதாக குறிப்பிட்டார்.

உணவு பாதுகாப்பிற்கான முன்னுரிமையையும், உள்நாட்டு உணவுப்பொருட்களின் பதப்படுத்தும் திறனையும் நிதியமைச்சரின் இந்த கட்டுரை பறைசாற்றுவதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖

## பிரதமர் - பட்டேல்

சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது பிறந்தநாள் வரும் 31-ம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி நாடுமுழுவதும் ஒற்றுமை ஓட்டத்தில் அனைவரும் பங்கேற்க பிரதமர் திரு. நரேந்திரமோடி அழைப்பு விடுத்துள்ளார்.

பட்டேலின் ஒருங்கிணைந்த இந்தியா என்ற தொலைநோக்கு சிந்தனையை போற்றும் வகையில் அனைவரும்

இந்த ஒற்றுமை ஓட்டத்தில் பங்கேற்பதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

## அமித்ஷா

நக்சல் தீவிரவாதம் வரும் மார்ச் இறுதிக்குள் களையப்படும் என்ற அரசின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் விரைந்து சரணடையுமாறு மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலம் கான்கர் மாவட்டத்தில் 21 மாவோயிஸ்ட்டுகள் ஆயுதங்களுடன் சரணடைந்ததாக தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்த அவர், எஞ்சியவர்களும் சரணயடைய கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

## கடல்வளம்

மும்பையில், நாட்டில் கடல்சார் வார விழாவை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, சுயசார்பை அடிப்படையாக கொண்டு கடல்சார் தொலைநோக்கு திட்டம் அமைந்துள்ளதாக திரு. அமித்ஷா குறிப்பிட்டார்.

பல்வேறு சீர்த்திருத்தங்களால் நம் நாட்டின் கடல்சார் ஆற்றல் அண்மைக்காலங்களில் வலுவடைந்துள்ளதாக எடுத்துரைத்தார்.

இந்தோ பசிபிக் பிராந்தியம் மற்றும் தென்னாடுகளின் இணைப்பு பாலமாக இந்தியா செயலாற்றுவதாகவும் திரு அமித்ஷா குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய கப்பல்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் வளர்ச்சியடைந்த பாரதத்தின் இன்றியமையா தூணாக நம்நாட்டின் கடல்வளம் திகழ்கிறது என்றார்.

❖❖❖❖❖❖❖

காலாட் படை

79-வது காலாட் படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சுதந்திர இந்தியாவின் முதல் ராணுவ நிகழ்வாக நமது மண்ணின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலை எதிர்த்து காஷ்மீர் பள்ளத்தாக்கில் 1947-ம் ஆண்டு இதேநாளில், இந்தியா நடத்திய பதில் தாக்குதலை நினைவுகொள்ளும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

நாட்டின் இறையாண்மைக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை எதிர்த்து சீக்கிய ரெஜிமென்டின் முதலாவது பெட்டாலியன் ராணுவப்படை ஸ்ரீநகரில் களமிறங்கி, பாகிஸ்தான் ராணுவத்தின் ஆதரவுடன் நடத்தப்பட்ட தாக்குதலை துணிச்சலுடன் எதிர்த்து போராடி வெற்றியை நிலைநாட்டியதை குறிக்கும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

காலாட்படையின் தலைமை இயக்குநரான லெப்டினன்ட் ஜென்ரல் அஜய்குமார், பழம்பெரும் மற்றும் தற்போது பணியாற்றும் காலாட் படையினருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

காலாட் படையினர் எல்லை பகுதிகளை அர்ப்பணிப்புடன் பாதுகாத்து நாட்டின் இறையாண்மையை நிலை நாட்டுவதாக எடுத்துரைத்தார்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் வெலிங்டன் ராணுவ மையத்தில் உள்ள போர் நினைவிடத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களின் நினைவாக மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

போரில் உயிர்நீத்த வீரர்களின் ஏழு குடும்பத்தினருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான காசோலையை இக்கல்லூரியின் பிரிகேடியர் திரு.எஸ்.கே. தத்தா வழங்கினார்.

❖❖❖❖❖❖❖

**ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம்**

**ஊழல் தடுப்பு கண்காணிப்பு** விழிப்புணர்வு வாரம் இன்று தொடங்கியது.

பொதுவாழ்விலும், சமூக வாழ்விலும் ஊழலற்ற நேர்மையான வாழ்வை முன்னெடுத்துச்செல்லும் வகையில் **கண்காணிப்பு நமது பொறுப்பு** எனும் கருப்பொருளுடன் இவ்வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

திருச்சி அகில இந்திய வானொலி நிலையம் உட்பட, மத்திய மாநில அரசு அலுவலகங்கள், அமைச்சகங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், வங்கிகள் உள்ளிட்ட அனைத்து அமைப்புகளிலும் ஊழல் தடுப்பு உறுதிமொழி இன்று ஏற்கப்பட்டது.

பாரத் ரத்னா சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த நாளான அக்டோபர் 31-ம் தேதியை ஒட்டி இம்மாத கடைசி வாரத்தில் ஊழல் தடுப்பு கண்காணிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

உயர்கல்வியில் தமிழகம் சிறந்து விளங்குவதற்கு மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் திருச்சி பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் 33-வது பட்டமளிப்பு விழாவில் மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றிய அவர், இந்த கல்வி நிறுவனம் உலகளவில் புகழ்பெற்றிருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

உயர்கல்வி பெறுபவர்களுக்கு அதிக சலுகைகள் வழங்கப்படுவதுடன் புதுமைப்பெண், தமிழ் புதல்வன், நான் முதல்வன் என ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மாணாக்கருக்கு நேர மேலாண்மையின் அவசியத்தை அறிவுறுத்திய முதலமைச்சர், காலமாற்றத்திற்கு ஏற்ப தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

மோன்தா புயல்

வங்கக்கடலில் நிலைக்கொண்டுள்ள மோன்தா புயல் தற்போது சென்னைக்கு கிழக்கே, தென்கிழக்கே 520 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இது அடுத்த 12 மணிநேரத்தில் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து நாளைகாலை தீவிர புயல் சின்னமாக வலுப்பெறக்கூடும் என்றும்,

நாளை இரவு மச்சிலிப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் இடையே இது கரையை கடக்க கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மீனவர்கள் வரும் 29-ம் தேதிவரை இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர், காட்டுப்பள்ளி, பாம்பன், தூத்துக்குடி உள்ளிட்ட 9 துறைமுகங்களில் 2-எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இதனிடையே திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் நாளை கன, மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

**தமிழகம் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள** தயாராக உள்ளது என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் பணிகளை இன்று ஆய்வுசெய்த அவர், வடசென்னையில் 331 கிலோமீட்டர் தூர கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

கோவில்

திருச்செந்தூர் சுப்ரமணிய சுவாமி திருக்கோவில் உட்பட தமிழகத்தின் அனைத்து முருகப்பெருமான் ஆலயங்களில் கந்த சஷ்டி விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் இன்றுமாலை நடைபெறுகிறது.

திருச்செந்தூர் கடற்கரையில் சூரசம்ஹாரத்தை காண லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர்.

கோவில் வளாகம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் சூரசம்ஹாரத்தை ஒட்டி சிறப்பு பூஜைகள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. வாய்ஸ் ..

சேலத்தில் அம்மாபேட்டை சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கேற்று கந்தசஷ்டி பாராயணம் மேற்கொண்டதுடன் திருவிளக்கு பூஜையிலும் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖

இருவரி

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம், கந்த மங்கலம், கிழாய் உள்ளிட்ட பகுதிகளில் நெல்லின் ஈரப்பதம் தொடர்பாக தானிய சேமிப்பு மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின்

துணை இயக்குநர் திரு. P.K. சிங் தலைமையிலான மத்திய குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

தொடர்ந்து பழைய பாளையம், ஆக்கூர் உள்ளிட்ட பகுதிகளிலும் இக்குழுவினர் இன்றுபிற்பகல் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

**வைகை அணை**

வைகை அணையிலிருந்து பூர்வீக பாசன நிலங்களுக்கு இன்று தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

அணையிலிருந்து 3 ஆயிரத்து 900 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படும் நிலையில் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖